RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 96 | ஏப்ரல்.13 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# “கொள்கையற்ற கூட்டத்தை விரட்டியடிக்க வேண்டும்” : பரமக்குடியில் ஸ்டாலின் பேச்சு

பரமக்குடி: ஏப்.13-

கொள்கையற்ற அடிமைக் கூட்டத்தை, சுயநலத்திற்காக தமிழ்நாட்டை அடகு வைக்க ஒன்று சேர்ந்திருக்கும் துரோகக் கூட்டத்தை, மக்கள் விரட்டியடிக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

பரமக்குடியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: “நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபோது, தமிழ்நாடு என்ன நிலையில் இருந்தது? கரோனாவில் ஆக்சிஜன் சிலிண்டர்கள் கூட கிடைக்காத நிலையில் இருந்தது. தமிழ்நாட்டின் பொருளாதாரம் 0.07 விழுக்காடு என்று சரிந்து கிடந்தது. நிதிநிலைமை படுபாதாளத்தில் இருந்தது.

போர்க்கால அடிப்படையில் என்று சொல்வார்கள் அல்லவா... அது போன்று, முதலில் கரோனாவில் இருந்து மக்களை மீட்டெடுத்தோம். அடுத்து, திறமையான நிர்வாகத்தால் நிதி நிலைமையை மீட்டெடுத்திருக்கிறோம். அதன் பயனாக, இந்தியாவிலேயே முதல் மாநிலமாக 11.19 விழுக்காடு என்ற டபுள் டிஜிட் பொருளாதார வளர்ச்சியை கொண்டு வந்திருக்கிறோம். இதெல்லாம் சாதாரணமாக நடக்கவில்லை. கடுமையாக உழைத்திருக்கிறோம்.

சிந்தித்துப் பாருங்கள்... கடந்த ஐந்தாண்டுகளில் என்னை செய்திகளில் பார்க்காத நாள் இருக்காது. ஆய்வுக்கூட்டம் ஸ்ரீ கள ஆய்வுகள் ஸ்ரீ அரசு நலத்திட்ட விழாக்கள் ஸ்ரீ காணொளி வாயிலாக திறப்பு விழாக்கள் நேரடியாக மக்கள் சந்திப்பு என தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருந்தேன். நான் மட்டுமல்ல, அரசு இயந்திரத்தையே முழுமையாக செயல்பட வைத்தேன். அமைச்சர்கள் தொடங்கி, கடைநிலை ஊழியர்கள் வரைக்கும், கடுமையான உழைப்பைப் போட்டு, தமிழ்நாட்டை மீட்டு, இன்று இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாட்டை கொண்டு வந்திருக்கிறோம்.

ஆனால், இந்த வளர்ச்சி போதுமா நமக்கு? போதாது, சொல்லுங்கள்... தமிழ்நாட்டுக்கு இந்த வளர்ச்சி போதுமா? நிச்சயம் போதாது! தமிழ்நாட்டை, உலக அளவில் தனி பிராண்டாக நாம் வளர்த்தெடுக்க வேண்டும்! அதற்கு, ஏப்ரல் 23ஆம் தேதி நீங்கள் அனைவரும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்.

நான் கேட்கும் ஒரே கேள்வி. இப்படி என்றைக்காவது ஒருநாள் பழனிசாமி பேசியிருக்கிறாரா? அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? மறைந்த தலைவர்களை ஸ்ரீ நம்முடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் தலைவர்களை கொச்சைப்படுத்தி பேசுவது, அடுத்தவர்களின் மரணத்தை எதிர்பார்த்துப் பேசுவது, பெண்களைக் கண்ணியமில்லாமல் பேசுவது என்று தொடர்ந்து செய்து கொண்டு இருக்கிறார். வாய்க் கொழுப்பு எடுத்து சாக்கடைக்கு சரிசமமாக வந்து விழும் அவருடைய வார்த்தைகளுக்கு பாடம் புகட்டப் போகும் நாள்தான், ஏப்ரல் 23.

கொள்கையற்ற அடிமைக் கூட்டத்தை, சுயநலத்திற்காக தமிழ்நாட்டை அடகு வைக்க ஒன்று சேர்ந்திருக்கும் துரோகக் கூட்டத்தை, மக்கள் விரட்டியடிக்க வேண்டும். சாதனைகளால் தமிழ்நாட்டை உயர்த்தியிருக்கும் திராவிட மாடல் அரசை மீண்டும் ஆட்சியில் நீங்கள் அமர்த்த வேண்டும். ஏனெனில்,



திராவிட மாடலின் திட்டங்கள் என்பது வரலாற்றில் நிற்கும் திட்டங்கள் மட்டுமல்ல; புது வரலாற்றையே படைக்கும் திட்டங்கள். வெறும் புள்ளி விவரங்களில் அல்ல; கோடிக்கணக்கான தமிழ் மக்களின் புன்னகையால் எழுதப்பட்டிருக்கும் சாதனை சரித்திரம்தான் திராவிட மாடல்.

முதலமைச்சரான முதல் நாள் நான் போட்ட முதல் கையெழுத்தே, மகளிர் முன்னேற்றத்திற்கான மாபெரும் படிக்கட்டாக அமைந்த விடியல் பயணத் திட்டம். நம்முடைய அரசு பொறுப்பேற்ற 1800 நாட்களில், 935 கோடிக்கும் அதிகமான பயணங்களை மகளிர் மேற்கொண்டிருக்கிறார்கள். ஊரெல்லாம் சுற்றி, பூ, காய்கறி விற்று, 5 ஆயிரம் சம்பாதித்தால், அதில் ஆயிரம் ரூபாய் பேருந்திற்கே போய்விடுகிறதென்று கவலைப்பட்டு வேதனையோடு இருந்த பல சகோதரிகள், விடியல் பயணத்தால் பயணிக்கும் ஒவ்வொரு நாளும் இந்த ஸ்டாலினை நிச்சயமாக நினைப்பார்கள்.

பக்கத்து நகருக்கு வேலைக்குச் செல்லும் சகோதரிகள், இந்த ஸ்டாலினுக்கு நன்றி கூறுவார்கள். இரண்டு, மூன்று ஊர் தள்ளியிருக்கும் அப்பா அம்மாவையும், உறவினர்களையும் அடிக்கடி பார்க்க முடியாமல் தவித்த பெண்கள், நினைத்த உடனே, பேருந்து ஏறிப் போய், அவர்களின் அப்பாஸ்ரீஅம்மாவை பார்க்கும்போது, நிச்சயமாக இந்த அண்ணனை நினைப்பார்கள். இப்படி மகளிர் வாழ்வுடன் ஓர் அங்கமாகிவிட்ட விடியல் பயணத்திற்கான பேருந்துகளை, விரைவில் அமையப் போகும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில், அதிகரிக்கப் போகிறோம்.

இதுமட்டுமா, ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு ஒவ்வொரு மாதமும் ஆயிரம் ரூபாயை வழங்கிக் கொண்டிருக்கும், “கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” இரண்டாயிரம் ரூபாயாக உயரப் போகிறது.

அடுத்து, அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரி செல்லும் மாணவ மாணவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும், புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டம். இனி அந்தத் தொகை, ஆயிரத்தி 500 ரூபாயாக உயரப் போகிறது.

19 லட்சம் பள்ளி மாணவர்களுக்கு சூடாக, சுவையாக சத்தான உணவை வழங்கும் “காலை உணவுத் திட்டம்”. இனி அதை, எட்டாம் வகுப்பு வரை விரிவாக்கம் செய்யப் போகிறோம். அதனால்தான், “வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது” என்று இருந்த நிலையை மாற்றி, “தெற்குதான் வழிகாட்டுகிறது” என்ற நிலையை திராவிட மாடலில் உருவாக்கி இருக்கிறோம்.

அப்படி வழிகாட்டும் தெற்கை, வஞ்சிக்கும் செயலில்தான் ஒன்றிய பாஜக அரசு இறங்கியிருக்கிறது. மகளிருக்கு இடஒதுக்கீடு கொடுக்கிறோம் என்பதை காரணமாக காட்டி, ஒன்றியத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைக்கப் பார்க்கிறார்கள். மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி, நாட்டின் வளர்ச்சிக்கு துணைநின்ற தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களை தண்டிக்கப் பார்க்கிறார்கள். இதை, இந்தியாவில் இருக்கும் அத்தனை ஜனநாயக இயக்கங்களும் எதிர்க்கப் போகிறோம்.

இந்த அநியாயத்தை எல்லாம் எதிர்த்து கேள்வி கேட்கும் துணிச்சல் பழனிசாமிக்கு இருக்கிறதா? மற்றவற்றுக்கெல்லாம் வாய்கிழியப் பேசும் பழனிசாமி, பாஜகவின் அட்டூழியங்களை எதிர்த்து கேள்வி கேட்க சொன்னால் மட்டும், “சைலண்ட் மோடுக்கு” போய் விடுகிறார். மோடியையும் ஸ்ரீ அமித்ஷாவையும் எதிர்த்து பேச வேண்டுமென்றால் பயத்திலேயே “ஸ்விட்ச் ஆஃப்” ஆகிவிடுவார்.

அவர் எதற்காக பிரச்சாரத்திற்கு போகிறார் தெரியுமா? இப்படிப்பட்ட ஒரு அடிமை, உலகத்தில் யாருமே பார்த்ததில்லை என்ற கின்னஸ் சாதனையைப் படைக்கத்தான் பிரச்சாரம் செய்கிறார்! இவரின் ஓனர் யாரு? பாஜக. பாஜகவுக்கு தமிழ்நாட்டின் மீது வரும் திடீர் அக்கறை என்பது, வெறும் அரசியல் ஸ்டண்ட் மட்டும்தான்! அவர்கள் செய்வது ராஜதந்திரம் இல்லை; இரட்டை வேட தந்திரம்.

அண்மையில், மேற்கு வங்கத்தில் தேர்தல் அறிக்கை வெளியிட்டிருக்கும் பாஜக, பொது சிவில் சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய பன்முகத்தன்மைக்கு பாஜக விட்டிருக்கும் நேரடி சவால் இது. மேற்கு வங்கத்தில் இருந்து விட்டிருக்கும் அந்தச் சவாலை, அவர்களால் தமிழ்நாட்டில் விடமுடியவில்லை.

ஏன் என்றால், தமிழ்நாட்டை பாதுகாத்துக் கொண்டு இருப்பது “திராவிடப் பெருஞ்சுவர்!” தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தலைவர் கலைஞர் கட்டிக் காத்த இந்தத் தமிழ்க் கோட்டையை சமத்துவத்துக்கு எதிரான மதவாத கும்பல்கள் ஆக்கிரமிக்க ஒருநாளும் தமிழர்கள் அனுமதிக்க மாட்டார்கள்! இதை, பா.ஜ.க.வும் நன்றாக உணர்ந்திருக்கிறது!

தமிழ்நாட்டுக்கு வரிசை கட்டி வரும் பாஜக அமைச்சர்களும் நட்சத்திரப் பேச்சாளர்களும் தொடர்ந்து என்ன பேசுகிறார்கள்? தமிழ்நாடு மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பேசுகிறார்கள்! இதை ஒரு நாளாவது கண்டித்திருக்கிறாரா பழனிசாமி? நாம் போராடுவது, திமுகவின் வெற்றிக்கு மட்டுமல்ல, கூட்டணியின் வெற்றிக்காகவோ மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டின் வெற்றிக்காக” இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

## இந்தியாவின் உள்நாட்டு எல்பிஜி உற்பத்தி ஒரு மாதத்தில் 40%லிருந்து 60% ஆக உயர்வு

புதுடெல்லி, ஏப்.13-

இந்தியாவின் எல்பிஜி உள்நாட்டு உற்பத்தி ஒரு மாதத்துக்குள் 40 சதவீதத்தில் இருந்து 60% ஆக உயர்ந்துள்ளது.

இதுகுறித்து மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் சுஜாதா சர்மா கூறும்போது, ‘‘இந்தியாவிடம் போதுமான கச்சா எண்ணெய் கையிருப்பு உள்ளது. நமது சுத்திகரிப்பு நிலையங்கள் அவற்றின் முழுத் திறனில் இயங்கி வருகின்றன. திரவமயமாக்கப்பட்ட பெட்ரோலிய வாயுவின் (எல்பிஜி) உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளது. இது நமது தேவையில் கிட்டத்தட்ட 60 சதவீதத்தைப் பூர்த்தி செய்கிறது” என்றார்.



சமீபத்திய தரவுகளின் படி, 202526ம் ஆண்டில் இந்தியாவின் வருடாந்திர எல்பிஜி நுகர்வு 3.3 கோடி டன்களாக இருந்தது. பிப்ரவரி 28ல் வெடித்த மேற்கு ஆசியப் போர் காரணமாக ஏற்பட்ட விநியோகத் தடைகளால், மார்ச் மாதத்தில் எல்பிஜி நுகர்வு கடுமையாகக் குறைந்துள்ளதாக மாதாந்திர தரவுகள் காட்டுகின்றன. போருக்கு முன்பு, இந்தியா தனது எல்பிஜி தேவையில் 60 சதவீதத்தை இறக்குமதி மூலம் பூர்த்தி செய்தது. இதில் பெரும்பகுதி மேற்கு ஆசியாவில் இருந்து, குறிப்பாக கத்தாரில் இருந்து இறக்குமதியானது.

எல்பிஜி நுகர்வு ஜனவரியில் 30 லட்சம் டன்னாகவும், பிப்ரவரியில் 28 லட்சம் டன்னாகவும் இருந்தது. இது மார்ச் மாதத்தில் 23.79 லட்சம் டன்னாகக் குறைந்தது. இது ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 26.6% சரிவாகும். ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் இருந்தும் எல்பிஜியை இந்தியா இறக்குமதி செய்கிறது.

ஹார்முஸ் ஜலசந்தி வழியாகக் கப்பல்கள் செல்லும் பாதையைத் ஈரான் தடுத்ததைத் தொடர்ந்து எல்பிஜி இறக்குமதி கடுமையாகச் சரிந்தது. இதனால், 33.2 கோடிக்கும் அதிகமான வீடுகளுக்கு 100 சதவீத எல்பிஜி விநியோகத்தை உறுதி செய்து, வர்த்தக சிலிண்டரின் விநியோகத்தை மத்திய அரசு குறைத்தது. இதற்கிடையில், எல்பிஜி உற்பத்தியை அதிகரிக்குமாறு இந்திய சுத்திகரிப்பு நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**

## மேற்கு வங்கமும் மீன் அரசியலும் மாறி மாறி குற்றம் சாட்டும் பாஜக, டிஎம்சி

புதுடெல்லி, ஏப்.13-

பாஜக ஆட்சிக்கு வந்தால் மீன் உண்ணத் தடை வரும் என முதல்வர் மம்தா பானர்ஜி துவக்கிய மீன் அரசியல் தேர்தலில் தொடர்கிறது. மீன் உற்பத்தியில் கவனம் செலுத்தாமல் இறக்குமதி செய்வதாகத் திரிணமூல் காங்கிரஸ் (டிஎம்சி) அரசு மீது பிரதமர் நரேந்திரமோடி புகார் வைத்துள்ளார்.

மேற்கு வங்க மாநிலத்தின் பூகோள ரீதியானக் காரணங்களால் அங்கு மீன்கள் உற்பத்தி அதிகம். இதனால், அம்மாநில மக்களின் ஆன்மிக நம்பிக்கையிலும் இடம்பெற்ற மீன் உணவை பிராமணர்களும் உண்பது உண்டு.

இதன் காரணமாக, சட்டப்பேரவைப் பிரச்சாரத்தின் இடையே, மீன் விவகாரத்தை முன்வைத்து முதல்வர் மம்தா பானர்ஜி பாஜகவை கடுமையாகத் தாக்கினார். இதையடுத்து, பாஜகவின் வேட்பாளர்கள் கைகளில் மீன்களுடன் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்கின்றனர்.

இந்த மீன் அரசியல் தொடரும் வகையில் தற்போது பிரச்சாரத்திற்கு வந்த பிரதமர் மோடி, மீன் உற்பத்தியில் டிஎம்சி அரசு போதிய கவனம் செலுத்தவில்லை எனப் புகார் கூறியுள்ளார். இதன் காரணமாக, பாஜக மற்றும் டிஎம்சி



ஆகிய இரு கட்சிகளின் பிரச்சாரங்களில் மீன் ஒரு முக்கிய பங்கு வகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து ஹல்தியாவின் பாஜக தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகையில், ‘மேற்கு வங்க மாநிலத்தின் மீன் வளத்தை முறையாகப் பராமரித்து வளர்ப்பதில் திரிணாமுல் காங்கிரஸ் அரசு தோல்வியடைந்தது.

டிஎம்சி ஆட்சியில் மீன் உற்பத்தி மிகவும் குறைந்துவிட்டது. அதேசமயம், பிஹாரில் மீனவர்களின் நலனுக்காக பாஜக பல்வேறு பணிகளை மேற்கொண்டதன் விளைவாக, அங்கு மீன் உற்பத்தி இரு மடங்காக உயர்ந்துள்ளது.

இங்கு மீன்களுக்கான தேவை மிக அதிகமாக இருந்தபோதிலும், அதற்கான உற்பத்தியைப் பெருக்குவதில் டிஎம்சி அரசு தோல்வியடைந்துள்ளது. இதன் காரணமாகவே, மேற்கு வங்க மாநிலம் பிற மாநிலங்களிடமிருந்து மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளில் மீன் விநியோகத்தை அதிகரிக்கவும், மீன் உற்பத்தியில் தன்னிறைவு அடையவும் டிஎம்சி அரசு எந்தவொரு உறுதியான நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தேர்தலில் வெற்றி பெற்று பாஜக ஆட்சி அமைத்தால், மேற்கு வங்கத்தை மீன்வளம் மற்றும் கடல் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக்கும்.’ எனத் தெரிவித்தார்.

மீன் விவகாரத்தில் தன்னை விமர்சித்த பிரதமர் மோடிக்கு பதிலடி அளிக்கும் வகையில் வடக்கு 24 பர்கானாவின் அகர்பாராவில் மம்தா பானர்ஜி பேசுகையில், ’பிரதமர் மோடி வைக்கும் மீன் மீதானக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் பொய்யானது. பிஹாரில் மீன் உற்பத்தி உண்மையில் அதிகரிக்கவில்லை.

மாறாக அங்கு மீனுக்கான தேவை குறைந்துவிட்டதே இதற்குக் காரணம். பாஜக அரசின் செயல்பாடுகளாலேயே இத்தகைய சூழல் ஏற்பட்டுள்ளது. பிஹாரில் உள்ள மக்களை மீன் சாப்பிடவே நீங்கள் அனுமதிப்பதில்லை. ஆனால் இங்கே, நாங்கள் சந்தைகளில் மீன் வாங்கிச் சாப்பிடுகிறோம். முன்பு ஆந்திரப் பிரதேசத்திலிருந்து மீன்களை இறக்குமதி செய்து வந்தோம். தற்போது அந்த இறக்குமதி நிறுத்தப்பட்டுவிட்டது. பிரதமர் இதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ராஜஸ்தான், பிஹார் மற்றும் உத்தரப் பிரதேச மாநிலங்களில் உள்ள மக்களை மீன், முட்டை மற்றும் இறைச்சி சாப்பிட நீங்கள் அனுமதிப்பதில்லை. அத்தகைய பொருட்களை விற்பனை செய்யும் கடைகள் மூடப்பட்டு வருகின்றன.

வங்காள மக்களுக்கு மீன் சாப்பிடுவது எப்படி என்று நீங்கள் பாடம் எடுக்க வேண்டாம். பாஜகவினர் உங்களை மீன் சாப்பிட விடமாட்டார்கள். நீங்கள் இறைச்சி சாப்பிட முடியாது, முட்டை சாப்பிட முடியாது, வங்காள மொழியில் பேச முடியாது. மீறிப் பேசினால், உங்களை 'வங்கதேசத்தவர்' என்று முத்திரை குத்துவார்கள்.’ என தெரிவித்தார்.

ஒரு படி மேலே சென்று பேசிய மத்திய அமைச்சர் சுகந்த் மஜும்தார், ’பாஜக ஆட்சிக்கு வந்தால், மீன் உண்ணும் பழக்கமுடைய ஒருவரே முதலமைச்சராகப் பொறுப்பேற்பார் என்றும் கூறினார்.

தேர்தல் பிரச்சாரங்களில் பங்கேற்க வரும் பாஜக தலைவர்களை, அவர்கள் செல்லும் பகுதிகளில் முட்டை மற்றும் மீன்களைக் கொண்டு வரவேற்குமாறு தொண்டர்களுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.



# வெலகல்நத்தம் ஊராட்சியில் ஜோலார்பேட்டை திமுக வேட்பாளர் தீவிர வாக்கு சேகரிப்பு

ஜோலார்பேட்டை : ஏப். 13-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து ஜோலார்பேட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.கே.சதீஷ்குமார் தலைமையிலும் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் அல்லி முத்து முன்னிலையிலும் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், வெலகல்நத்தம் ஊராட்சி பகுதிகளில் மலர் தூவி பட்டாசுகள் வெடித்து கோலாகலமாக வரவேற்று, தீவிர வாக்கு சேகரித்து சிறப்பு உரையாற்றி வருகின்றனர். உடன் ஜோலார்பேட்டை ஒன்றிய குழு பெருந்தலைவர் சத்தியா சதீஷ்குமார், மாவட்ட கவுன்சிலர் ஜெயா சுந்தரேசன், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், 2000 திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு வாக்குகள் சேகரித்தனர்

# தேனி மாவட்ட ஆட்சியர் முக்கிய அறிவிப்பு




தேனி ஏப்.13-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல்கள், 2026 எதிர்வரும் 23.04.2026 அன்று நடைபெறவுள்ளது. தேனி மாவட்டத்தில், 198 ஆண்டிபட்டி மற்றும் 201கம்பம் சட்டமன்றத் தொகுதிகளில் முறையே 18 மற்றும் 19 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டி யிடுவதால், மேற்படி இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் கூடுதலாக பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை (Ballot Units) தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தேனி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் காலை 10.00 மணி அளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் மற்றும் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் கனிணி மூலம் குலுக்கல் முறையில் முதலாவது துணை சமவாய்ப்பிற்கு உட்படுத்தி (1st Supplementary Randomization) மேற்படி சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மேலும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பாதுகாப்பு வைப்பறையானது (Strong Room) அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் மற்றும் போட்டியிடும் வேட்பாளர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டு, சட்டமன்ற தொகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கீழ்க்காணும் விவரப்படி சம்மந்தப்பட்ட சட்டமன்றத்தொகுதியின் வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள பாதுகாப்பு வைப்பறையில் வைப்பதற்கு பிரித்து வழங்கப் பட்டது. சட்டமன்றத் தொகுதி எண். மற்றும் பெயர்மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கை (BU)198.ஆண்டிபட்டி.412201.கம்பம்.414மொத்தம்.826மேலும், மேற்படி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சம்மந்தப்பட்ட வட்டாட்சியர் அலுவலகங்களில் உள்ள பாதுகாப்பு வைப்பறையில் வைத்திடும் பொருட்டு, GPS பொருத்தப்பட்ட கண்டெய்னர் வாகனங்கள் மூலம் ஆயுதம் ஏந்திய காவலர்கள் பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டது.





# திருநீர்மலை பகுதியில் பல்லாவரம் திமுக கூட்டணி வேட்பாளர் அனகை முருகேசனை ஆதரித்து வாகன பிரச்சாரத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

பல்லாவரம் ஏப். 13-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணி சார்பில் தேமுதிக வேட்பாளர் அனகை முருகேசன் போட்டி யிடுகிறார்.

இதனைத் தொடர்ந்து தொகுதியில் உள்ள பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்குகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இதில் திருநீர்மலை பகுதியில் பம்மல் வடக்கு பகுதி கழகச் செயலாளர் திருநீர்மலை ஜெயக்குமார் தலைமையில் வேட்பாளர் அனகை முருகேசன் வாகன பிரச்சாரத்தில் ஈடுபட்டு முரசு சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

அவருக்கு வழியெங்கிலும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

முன்னதாக திருநீர்மலை கோவிலில் சாமி தரிசனம் செய்து பிரச்சாரத்தை அவர் தொடங்கினார்.

மேலும் அப்பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பிரச்சாரத்தின் போது பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ், மண்டல குழு தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் இ.எஸ். பெர்னாட், மதிமுக மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன், பிசிக மாவட்ட செயலாளர் தமிழரசன், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

# முதியோர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வீடுகளுக்கே சென்று தபால் வாக்கு சேகரிக்கும் வாக்குச்சாவடி அலுவலர்கள் செல்லும் வாகனத்தினை மாவட்ட. தேர்தல் அலுவலர் கொடியசைத்து துவக்கி வைத்தார்



உதகை, ஏப்.13-

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு, உதகை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர்கள் மற்றும் மாற்றுதிறனாளிகளின் வீடுகளுக்கே சென்று தபால் வாக்குகள் சேகரிக்கும் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் குழுவினர்கள் செல்லும் வாகனத்தினை, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்திய தேர்தல் ஆணையம், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 யை முன்னிட்டு வாக்குசாவடிகளுக்கு நேரில் வந்து வாக்களிக்க முடியாத மாற்றுத்திறனாளிகளுக்கு, தபால் மூலம் வாக்களிக்கலாம் என அறி வித்துள்ளது. அதேபோல், 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறன் கொண்ட வாக்காளர்கள் சிரமமின்றி வாக்களிக்கும் விதமாக ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும், வாக்களிப்பதற்கு ஏதுவாக அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், 85 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது விருப்பத்தின் பேரில் இல்லத்திற்கே சென்று வாக்குகளை சேகரிக்க இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளதை தொடர்ந்து, படிவம் 12டி, 108 உதகமண்டலம் சட்டமன்ற தொகுதி, 109 கூடலூர் சட்டமன்ற தொகுதி, 110 குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் 2,631 வாக்காளர்கள் தபால் மூலம் வாக்களிக்க விருப்பம் தெரி வித்துள்ளனர்.

அதனை தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், உதகை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தேர்தல் நடத்தும் அலுவலர் / உதகை வருவாய் கோட்டாட்சியர் டினு அரவிந்த், தேர்தல் கட்டுப்பாட்டு அறை பொறுப்பு அலுவலர் (ஜென்மம் நிலங்கள்) வாசுகி உட்பட கலந்து கொண்டனர்.





# திருப்பத்தூர் வடக்கு ஒன்றியத்தில் ஜோலார்பேட்டை திமுக வேட்பாளர்தீவிர வாக்கு சேகரிப்பு

ஜோலார்பேட்டை : ஏப். 13-

திருப்பத்தூர் மாவட்டம்ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதியின் வெற்றி வேட்பாளர் கவிதா தண்டபாணியை ஆதரித்து திருப்பத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.சி.சுரேஷ்குமார் தலைமையில் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதி, திருப்பத்தூர் வடக்கு ஒன்றிய காந்திபுரம், சிகே ஆசிரமம், எம்ஜிஆர் நகர், கதிரிமங்கலம், மேல் அச்சமங்கலம், அண்ணா நகர், அச்சமங்கலம், மாக்காணூர், பால்நாங்குப்பம், ஊராட்சி பகுதிகளில் மலர் தூவி பட்டாசுகள் வெடித்து கோலாகலமாக வரவேப்பு நடைபெற்றது. இதற்கு சிறப்பு அழைப்பாளராக தலைமை கழக பேச்சாளர் ஜான்சி தீவிர வாக்கு சேகரித்து சிறப்புரை ஆற்றினார். உடன் கூட்டணி கட்சியன காங்கிரஸ் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏலகிர செல்வம், தேமுதிக மாவட்ட பொருளாளர் ஆஞ்சி, மற்றும் விடுதலை சிறுத்தை கட்சியின் பொறுப்பாளர்கள், கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டு வாக்குகள் சேகரித்தனர்

# பர்கூர் அருகேபள்ளி வளாகத்தில் உள்ள கொடி கம்பத்தில் அதிமுக கொடி - பரபரப்பு

கிருஷ்ணகிரி, ஏப்.13-

கிருஷ்ணகிரி மாடவ்டம் பர்கூர் அருகே அரசு பள்ளி வளாகத்தில் உள்ள கொடி கம்பத்தில் அதிமுக கொடி ஏற்றப்பட்டிருந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மருதேபள்ளியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. நேற்று பள்ளி விடுமுறை. இந்நிலையில் இந்த பள்ளி வளாகத்தில் உள்ள கொடி கம்பத்தில் அதிமுக கொடி ஏற்றப்பட்டிருந்தது. பர்கூர் சட்டமன்ற தொகுதியின் அதிமுக வேட்பாளரான கோவிந்தராசன் மருதேப்பள்ளி பகுதியில் பிரசாரம் மேற்கொண்டிருந்து நிலையில், அவர் பிரசாரம் செய்வதை வரவேற்கும் விதமாக சாலையோரம் அதிமுக உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் கொடிகள் கட்டப்பட்டிருந்த நிலையில், பள்ளி வளாகத்தில் உள்ள கொடி கம்பத்தில் அதிமுக கொடி ஏற்றப்பட்டிருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

உடனே அங்கு இருந்த அதிமுகவினரிடம் பேசிய அப்பகுதி மக்கள் கம்பத்திலிருந்து அதிமுக கொடியை அகற்றுமாறு தெரிவித்தனர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அதன்பின் நீண்ட நேரத்திற்கு பின் கொடி அகற்றப்பட்டது.

இதையடுத்து தேர்தல் விதிகளை மீறி, பள்ளியில் உள்ள கொடி கம்பத்தில் அதிமுக கொடி ஏற்றப்பட்டது குறித்து, அந்த கிராமத்தை சேர்ந்த திமுக பிரமுகர் காவல்துறை மற்றும் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்துள்ளார். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# மங்களூரு சென்னை எழும்பூர் இடையே பயணிகள் வசதிக்காக வரும் 20ம் தேதி சிறப்பு ரயில் இயக்கம்

மங்களூரு, ஏப்.13-

மங்களூரு சென்னை எழும்பூர் இடையே பயணிகள் வசதிக்காக வரும் 20ம் தேதி சிறப்பு ரயில் இயக்கப்படுவதாக தென்னக ரயில்வே அறிவித்துள்ளது. மறுமார்க்கமாக வரும் 21ம் தேதி சென்னையில் இருந்து மங்களூருக்கு இந்த ரயில் செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# மூன்றாவது முறையாக போட்டியிடும் என்னை சட்டமன்றத்திற்கு அனுப்பினால் பொதுமக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பேன்



தேனி ஏப்.13-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியில் மூன்றாவது முறையாக அதிமுக சார்பில் லோகிராஜன் போட்டியிடுகிறார்.அவரை எதிர்த்து அவரது அண்ணன் மகாராஜன் திமுக சார்பில் போட்டியிட்டு ஏற்கனவே இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக உள்ளார். ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளான அம்மச்சியாபுரம் குன்னூர், அரப்படி தேவன் பட்டி ,இந்திரா காலனி, திருமலாபுரம் கா.விலக்கு பெருமாள் தேவன்பட்டி ,கருப்பதேவன்பட்டி உள்ளிட்ட பகுதிகளுக்கு சென்று லோகிராஜன் தீவிர வாக்கு சேகரித்தார். அப்போது அவர் பேசியதாவது "திமுக ஆட்சியில் எந்த ஒரு அடிப்படை பிரச்சனைகளையும் பொதுமக்களுக்கு தீர்வு காணவில்லை. பெயரளவிலே ஆட்சியை நடத்திக் கொண்டே இருந்தனர். முல்லைப் பெரியாறு ஆற்றின் அருகே உள்ள குன்னூர் கிராம மக்களுக்கு குடிநீர் கிடைக்கவில்லை என இன்றுவரை மக்கள் நீண்ட நாட்களாக போராடுகின்றனர். முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா ஆட்சியின் போது கா.விலக்கில் எனது 27 ஏக்கர் நிலத்தை அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு தானமாக கொடுத்தேன். இன்று நாள்தோறும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தேனி மாவட்டம் மட்டும் அல்லாமல் அண்டை மாநிலமான கேரளா பகுதியிலிருந்தும் அதிகளவில் மருத்துவ பயன்பெறுகின்றனர்.என்னை எதிர்த்து மூன்றாவது முறை எனது உடன்பிறந்த மூத்த சகோதரர் மகாராஜன் போட்டியிடுகிறார்.அவர் ஏற்கனவே இரண்டு முறை ஆண்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினராக இருந்து எந்த ஒரு அடிப்படை பிரச்சினையும் தீர்க்கவில்லை.அதிமுகவில் என்னைத்தான் முதல் முதலில் வேட்பாளராக அறிவித்தனர் அப்படி இருந்தும் தம்பி என்றும் பாராமல் எனக்கு போட்டியாக மீண்டும் மூன்றாம் முறையாக களம் இறங்குகிறார். எனவே அவரை (மகாராஜன் ) இந்த முறை தோற்கடித்து என்னை இரட்டை இலை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்து சட்டமன்றத்திற்குள் அனுப்புவீர்கள் நம்புகிறேன்" என ஆருடமாக தெரி வித்தார்.இந்த பிரசாரத்தின் போது தேனி அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் முறுக்கோடை ராமர்,மாநில அம்மா பேரவை இணைச் செயலாளர் ஜெயக்குமார், அமமுக தேனி வடக்கு மாவட்ட செயலாளர் காசிமாயன்,ஆண்டிபட்டி அதிமுக ஒன்றிய செயலாளர் வரதராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

திங்கள்கிழமை 13.04.2026



## செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி 3, 4வார்டில் இரட்டைஇலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பு

மாதவரம், ஏப்.13-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி அதிமுக வேட்பாளர் மாவட்ட செயலாளர் வி.மூர்த்திக்கு செங்குன்றம் நகர செயலாளர் டி.ஆர்.ரமேஷ் தலைமையில் செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சிக்கு உட்பட்ட 299வது பூத் 3 மற்றும் 4வது வார்டில் வழக்கறிஞர் துரை.ரமேஷ், கே.பரமசிவம்,த.பவானிசங்கர், ஒய்பி.பாபு, மாரியப்பன், மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் இளங்கோவன், விஜயன் உள்ளிட்ட கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள் இணைந்து வீடு வீடாக சென்று அதிமுக வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வாக்காளர்கள் இடம் வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தனர். இதில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.




## பெரியகுளம் அருகே குள்ளப்புரம் வேளாண் தொழில்நுட்பக் கல்லூரியில் பட்டிமன்றம்

தேனி ஏப்.13-

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே விழுப்புரம் வேளாண் தொழில் நுட்கல்லூரியில் "தமிழியம்" விழா சிறப்பாக நடைபெற்றது.

தமிழின் பாரம்பரியம் மற்றும் பண்பாட்டை எடுத்துரைக்கும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.மேலும், இன்றைய இளைஞர்களுக்கு விவசாயத்தின் மீதான நம்பிக்கை குறைந்து விட்டதா ??? அல்லது வளர்ந்து வருகிறதா ??? என்ற தலைப்பில் சிறப்பு பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் மாணவர்கள் தங்களது கருத்துகளை தெளிவாக முன்வைத்து கலந்துரையாடினர். மொத்தத்தில், "தமிழியம்" விழா மாணவர்களிடையே தமிழ்ப்பற்று மற்றும் விவசாயத்தின் முக்கியத்துவத்தை உயர்த்திய சிறப்பான நிகழ்வாக அமைந்தது. இந்த நிகழ்ச்சியில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



## பல்லாவரத்தில் அதிமுக கூட்டணியில் போட்டியிடும் ஐஜேகே வேட்பாளர் வெங்கடேசன் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிரவாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்

பல்லாவரம் ஏப்.13-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்ற தொகுதியில் கீழ்கட்டளை பகுதி சார்பில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி ஐ.ஜே.கே. வேட்பாளர் வழக்கறிஞர் வி.வெங்கடேசன் பல்லாவரம் பகுதி 17வது மேற்கு வட்டக் கழக செயலாளர் க.சிவமூர்த்தி ஏகேஎஸ், 17வது கிழக்கு வட்டச் செயலாளர் ராமநாதன் ஆகியோர் ஏற்பாட்டில் கீழ் கட்டளை பகுதி

சுபம் நகர் கிருஷ்ணா நகர் ஹவுசிங் போர்டு கச்சேரி மலை யாதவர் தெரு ராஜீவ் காந்தி நகர் தர்கா ரோடு லத்தீப் காலனி உள்ளிட்ட பகுதியில் வீதி விதியாக வாகனத்தில் சென்று இரட்டை இலை சின்னத்தில் வாக்குகள் சேகரித்தார் அப்போது அதிமுக ஆட்சியில் பொதுமக்களுக்கு செய்துதரப்பட்ட நல்லதிட்டங்களைபொதுமக்களிடம் எடுத்துக் கூறியும் அதிமுக ஆட்சிக்காலத்திலேயே மகளிர்காக அதிக திட்டங்களை திமுக முடுக்கி உள்ளனர்.

அதிமுக ஆட்சி மலர்ந்ததும் அந்த திட்டங்கள் மீண்டும் செயல்படுத்தப்படும் பெண்களுக்கு பாதுகாப்பு போதை இல்லா தமிழகம் மலர இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என கேட்டுக்கொண்டார் அவர் வாக்குசேகரிக்க சென்றபோது உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ப.தன்சிங் பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் வெங்கடேசன், பல்லாவரம் பகுதி அதிமுக செயலாளர் ஜெயபிரகாஷ். கீழ்கட்டளை பகுதி செயலாளர் சந்திரசேகர் ராஜா, மற்றும் கீழ்கட்டளை பகுதி மற்றும் பல்லாவரம் பகுதி கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு வாக்குகள் சேகரித்தனர்.

## அரசின் நலத்திட்டங்களை விளக்கிக் கூறி மதியழகன் எம்எல்ஏ பிரச்சாரம்

### தி.மு.க. பிரமுகருக்கு மிரட்டல் விடுத்தவர் மீது நடவடிக்கை கோரிக்கை

கிருஷ்ணகிரி, ஏப்.13-

பர்கூர் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. வேட்பாளரும் எம்.எல்.ஏ.வுமான மதியழகன் தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

சின்னசெட்டிப்பள்ளி, பி.ஆர்.ஜி. மாதேப்பள்ளி, அழகியபுதூர், கோனேரிகுப்பம், ராமன் கொட்டாய் உள்ளிட்ட பல பகுதிகளில் அவர் நேற்று பிரசாரம் செய்தார். அப்போது டவுன் பஸ்சில் ஏறி பயணிகளிடம் தி.மு.க. அரசின் சாதனைகள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை வழங்கி வாக்குகள் சேகரித்தார்.பின்னர் அவர் பேசியதாவது:"இந்த






பகுதியில் சாலை வசதி, மின்விளக்குகள், பள்ளி கட்டிடங்கள் உள்ளிட்ட பல திட்டங்களை எம்.எல்.ஏ.வாக நான் நிறைவேற்றி தந்துள்ளேன். மேலும் பர்கூரில் பஸ் நிலையம், ரேஷன் கடைகள், துணை சுகாதார நிலையங்கள் போன்ற பல்வேறு திட்டங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த திட்டங்கள் தொடர்ந்து செயல்பட தி.மு.க.க்கு வாக்களிக்க வேண்டும்" என்றார்.

இதனைத் தொடர்ந்து, எமக்கல் நத்தம் கிராமத்தில் தி.மு.க. ஒன்றிய வர்த்தகர் அணி அமைப்பாளர் ராமன் வீட்டிற்கு சென்ற அ.தி.மு.க. பிரமுகர் சுரேஷ், கத்தியுடன் ராமனின் மனைவி எல்லம்மாளுடன் தகராறு செய்து கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தை அறிந்த மதியழகன் எம்.எல்.ஏ., நேற்று அந்த கிராமத்திற்கு சென்று ராமன் மற்றும் அவரது மனைவி எல்லம்மாளை சந்தித்து ஆறுதல் கூறினார்.பின்னர் அவர் கூறியதாவது:"அ.தி.மு.க. வேட்பாளர் கோவிந்தராசன் தூண்டுதலின் பேரில் சுரேஷ் என்பவர் கத்தியுடன் வந்து தி.மு.க. பிரமுகர் குடும்பத்தினருக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து போலீசில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள்மீது அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.



## ஆட்சிக்கு வந்த ஒரு ஆண்டில் வேப்பனப்பள்ளியில் அரசு கலைக்கல்லூரி கொண்டு வரப்படும்

### அ.தி.மு.க. வேட்பாளர் கே.பி.முனுசாமி பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்.13-

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளிசட்டசபை தொகுதி அ.தி.மு.க., வேட் பாளரும், அக்கட்சியின் துணை பொதுச்செயலாளரு மான கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. திம்ஜேப்பள்ளி, ஊடேதுர்க்கம், நாகமங்கலம், தொட்ட திம்மன அள்ளி, ராயக்கோட்டை உள்ளிட்ட ஊராட்சிகளை சேர்ந்த 42க்கும் மேற்பட்ட கிராமங்களில் நேற்று பிரசா ரம் செய்து அ.தி.மு.க.வுக்கு ஆதரவு திரட்டினார். அப் போது அவர் பேசியதாவது: வேப்பனப்பள்ளி தொகுதியில் அதிகமான மலை கிரா மங்கள் உள்ளது. சாலைகள், மின்தட்டுப்பாடு பிரச்சினை உள்ளன. இவற்றை விட மாணவர்கள் கல்வி படிக்க நெடுந்தூரம் செல்லும் நிலை உள்ளது. கல்விதான் மாண வர்களின் அடிப்படை ஆதா ரம். அதை நிறைவேற்றும் வகையில், அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று ஒரு ஆண்டில் வேப்பனப்பள்ளியில் அரசு கலைக்கல்லூரி கொண்டு வரப்படும்.

வேப்பனப்பள்ளி தொகுதி யில் தண்ணீர் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்

படும், வனப்பகுதியை யொட்டி உள்ள கிராமங்களில் சாலைகள் அமைக்கப்படும். தி.மு.க. அறிவித்துள்ள 8 ஆயிரம் ரூபாய் கூப்பனில் கடைக்காரர்கள், கூப்பன் வாங்கி கொடுப்பவர்கள், தி.மு.க.வினர் என பல கமி ஷன்களை தாண்டி ரூ.4 ஆயிரம் மதிப்பிலான பொருட்கள் கிடைப்பதே கஷ்டம். தி.மு.க.வின் இத்த கைய ஏமாற்று வேலை களை மக்கள் நம்ப கூடாது. இந்த மாவட்டத்திற்கு அனைத்து திட்டங்களை யும் தந்தது அ.தி.மு.க. ஆட்சி தான். எனவே அ.தி. மு.க.வுக்கு வாக்களித்து என்னை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும்அவர் இவ்வாறு பேசினார்.



## திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் நல்லதம்பி வாக்கு சேகரிப்பு

திருப்பத்தூர் : ஏப். 13-

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சியில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் நல்லதம்பி வாக்கு சேகரித்தார். வாக்கு சேகரிப்பின்போது கந்திலி மத்திய ஒன்றிய செயலாளர் மாவட்ட கவுன்சிலர் மாவட்ட திட்ட குழு உறுப்பினர் வழக்கறிஞர் குணசேகரன், ஒன்றிய பெருந்தலைவர் திருமதி திருமுருகன், கூட்டணி கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மண்டல தெர்தல் பொறுப்பாளர் சுபாஷ்சந்திரபோஸ், தேமுதிக மாவட்ட துணை செயலாளர் சரவணன், ஒன்றிய துணை செயலாளர் வழக்கறிஞர் மாது, தீபா, ஒன்றிய ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் பாலு, காங்கிரஸ் கட்சி ஒன்றிய தலைவர் சாந்தசீலன் ஆகியோர், ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தன் ஆகியோர் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர். திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் நல்லதம்பி வாக்கு சேகரிக்கையில், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. குடிநீர், சாலை வசதி, கால்வாய், மேலும் தமிழ்நாடு முதலமைச்சரின் மகளிர் உரிமைத் தொகை, நான் புதல்வன் திட்டம், தாயுமானவர் திட்டம், கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட சாதனைகளை திராவிட மாடல் அரசு செய்துள்ளது என குறிப்பிட்டு பேசினார். முன்னதாக கந்திலி மத்திய ஒன்றிய கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை ஒன்றிய அமைப்பாளர் முனைவர் ரஜினி பொன்னாடை, மாலை அணிவித்தார். இந்நிகழ்ச்சியில் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் காளியப்பன்,

வெங்கடப்பன் BL2 முருகேசன், வெங்கடேசன், BDA கோகுல், BLC தாமரைச்செல்வி, ரவிக்குமார், ஆறுமுகம், ரூபினி, தேவி, அருண், மாது, மதிவாணன், திருமுருகன், விசிக ஒன்றிய செயலாளர் சங்கர், முகாம் அமைப்பாளர் வேலு, தேமுதிக திருஞானம், திமுக பிரமுகர்கள் மற்றும் கூட்டணி கட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மேள, தாளத்துடன் பிரமாண்ட வரவேற்பு அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## நிதியை முழுமையாக செலவு செய்த எம்.பி.;கிருஷ்ணகிரியிலேயே தங்கி மக்கள் பணியாற்றுவேன் : காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லகுமார் பிரசாரம்

கிருஷ்ணகிரி, ஏப்..13-

கிருஷ்ணகிரி சட்டசபை தொகுதியில் தி.மு.க. கூட்டணி சார்பில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லகுமார் போட்டியிடுகிறார். இவர் தற்போது தீவிரமாக தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். நேற்று காவேரிப்பட்டணம் பகுதி யில் பிரசாரம் மேற்கொண்ட போது அவர் பேசியதாவது:

கடந்த முறை எனக்கு ஓட்டளித்து எம்.பி ஆக்கினீர்கள். இந்த முறை எம்.எல்.ஏ., பதவிக்காக போட்டியிடுகிறேன்.

நான் எம்.பி.யாக இருந்தபோது, ஓசூர் ஜோலார் பேட்டை ரெயில்வே திட்டத் திற்கு எப்போது வேண்டுமானாலும் நிதி ஒதுக்கக்கூடிய



அளவிற்கு இந்த திட்டத்தை முடித்து கொடுத்துள்ளேன். கிருஷ்ணகிரி அடுத்த கங்கலே ரியில் மத்திய அரசின் கேந்திர வித்யாலயா பள்ளியை கொண்டு வந்தேன். அதுமட் டுமல்லாமல் இந்த மாவட்டத் தில் பல்வேறு மேம்பாலங்கள், தேசிய நெடுஞ்சாலைகள் என எண்ணற்ற திட்டங்களை நான் நிறைவேற்றியுள்ளேன்.

எம்.பி.நிதியை முழுமை யாக திட்டத்திற்கு செல விட்டஎம்.பி.என்று நாடாளுமன்றத்தில் பெயர் எடுத் துள்ளேன். இங்கேயே இருந்து நான் மக்கள் பணி யாற்றுவேன். இப்போது தி.மு.க. கூட்டணி சார்பில் கிருஷ்ணகிரி தொகுதியில் கை சின்னத்தில் போட்டி யிடுகிறேன். எனவே அந்த சின்னத்திற்கு வாக்களித்து என்னை வெற்றி பெற செய்ய வேண்டும்.

இவ்வாறு பேசினார். அவர்

இந்தநிகழ்ச்சியில் தி.மு.க. மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் கே.வி. எஸ்.சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி மற்றும் நிர் வாகிகள் கலந்து கொண்ட னர். முன்னதாக பிரசாரத் திற்கு சென்ற இடத்தில் காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லகுமாருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.



■ தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், சட்டமன்ற பொதுத்தேர்தலில் பணியாற்ற உள்ள வாக்குச்சாவடி நிலைய தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை1, நிலை 2, நிலை3 அலுவலர்கள் ஆகிய அலுவலர்களுக்கு நடைபெறும் இரண்டாம் கட்ட பயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நெல்லுக்கான ஊக்கத்தொகை விவகாரம் “ஸ்டாலின் கூறுவது உண்மையல்ல” நிர்மலா சீதாராமன்

புது டெல்லி, ஏப்.13-

‘நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு உத்தரவிட்டதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் விவசாயிகளை திசைதிருப்பும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட உண்மைக்கு புறம்பான திரிபு’ என மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், “நெல் சாகுபடிக்கு ஊக்கத்தொகை வழங்க வேண்டாம் என்று மத்திய அரசு தமிழகத்திற்கு உத்தரவிட்டுள்ளதாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பான, அரசியல் உள்நோக்கம் கொண்ட, தமிழக விவசாயிகளை திசைதிருப்பும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு திரிபு என்பது தெளிவாகிறது.

தமிழகத்திற்கு மட்டுமல்ல, அனைத்து மாநில தலைமைச் செயலாளர்களுக்கும் அனுப்பப்பட்ட தகவல், மாநில அரசுகள் வழங்கும் ஊக்கத்தொகை கொள்கைகளை தேசிய முன்னுரிமைகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும் என்ற ஒரு ஆலோசனையே ஆகும். மத்திய அரசின் இந்த ஆலோசனை, பயிர் பல்வகைப்படுத்துதலை (Crop Diversification) ஊக்குவித்தல் மற்றும் பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் போன்றவற்றில் சுயசார்பு அடைவதை நோக்கமாகக் கொண்ட ஒரு ஆக்கப்பூர்வமான மற்றும் தொலைநோக்குப் பார்வையாகும். இதன் மூலம், உள்நாட்டுத் தேவை அதிகமாக உள்ள பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து, அதிக லாபத்தைப் பெற வழிவகை செய்யப்படும்.

குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு (MSP) மேல் ஊக்கத்தொகை அல்லது போனஸ் அறிவிப்பது என்பது எப்போதும் மாநில அரசுகளின் தனிப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டது. அந்த அதிகாரத்தை யாரும் பறிக்கவில்லை. முதல்வர் ஸ்டாலின், தேச நலனில் அக்கறை கொண்டு ஆக்கப்பூர்வமாகச் செயல்படுவதற்குப் பதிலாக, தங்களின் குறுகிய சுயநல அரசியல் ஆதாயத்திற்காகத் திட்டமிட்டுத் திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

தேசம் தீர்வுகளைத் தேடும்போது, திமுக சர்ச்சைகளை உருவாக்குகிறது. மத்திய அரசு ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பை நல்கும்போது, திமுக அதைத் தேர்தல் அரசியலுக்காகச் சுரண்டப் பார்க்கிறது. அரசியலமைப்புச் சட்டப்படி உயர் பதவியில் இருக்கும் ஒரு முதல்வருக்கு இத்தகைய நடத்தை அழகல்ல. தமிழக விவசாயிகள் தங்கள் கவலைகளையே வாக்குகளுக்காக ஆயுதமாக்கும் அரசை அல்ல, மாறாக தங்கள் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக உழைக்கும் அரசையே எதிர்பார்க்கிறார்கள்.

எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள ஒவ்வொரு விவசாயிக்காகவும் தேசிய ஜனநாயகக் கூட்டணி (NDA) அரசு சோர்வின்றித் தொடர்ந்து பணியாற்றும். இத்தகைய திட்டமிட்டு உருவாக்கப்பட்ட பிரச்சினைகளால் நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்” எனத் தெரிவித்தார்.

# கடல் கண்ணி வெடிகளைக் கண்டுபிடிக்க முடியாததால் ஹார்முஸ் ஜலசந்தியை திறப்பதில் சிக்கல் நீடிப்பு

டெஹ்ரான், ஏப்.13-

கடல் கண்ணி வெடிகள் எங்கெல்லாம் இருக்கின்றன என்பதைக் கண்டுபிடிக்க முடியாததால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறப்பதில் சிக்கல் நீடிக்கிறது.

அமெரிக்கா உடனான போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் நூற்றுக்கணக்கான கண்ணி வெடிகளை ஈரான் ராணுவம் வீசியுள்ளது. குறிப்பாக கடலுக்கு அடியிலும், சில நூறு அடி ஆழத்திலும் கடலுக்கு மேலேயும் கண்ணி வெடிகள் வீசப்பட்டன. இதனால் சரக்குக் கப்பல் போக்குவரத்து முடங்கி உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எரிவாயுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்கா ஈரான் இடையே தற்காலிக போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டிருக்கிறது. இதன் ஒரு பகுதியாக ஹார்முஸ் ஜலசந்தியை உடனயாக திறக்க வேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது. இதைத் தொடர்ந்து கடலுக்கு மேலே மிதந்த கண்ணிவெடிகளை ஈரான் ராணுவம் அகற்றி உள்ளது. ஆனால் கடலுக்கு அடியிலும் சில நூறு அடி ஆழத்திலும் வைக்கப்பட்ட கண்ணிவெடிகளைக் கண்டறிவதில் சிக்கல் ஏற்பட்டு உள்ளது. எங்கெல்லாம் கண்ணிவெடிகள் வீசப்பட்டன என்பது குறித்தும் தெளிவான விவரங்கள் இல்லை.

இதனால் ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறப்பதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இதுதொடர்பாக ஈரான் அரசு அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், வழக்கமான ஹார்முஸ் ஜலசந்தி பாதையைத் தவிர்க்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது. அதோடு எந்தப் பாதையில் செல்ல வேண்டும் என்பது தொடர்பான வரைபடத்தையும் வெளியிட்டிருக்கிறது. இந்தப் பாதை வழியாக நேற்று முன்தினம் 10 எண்ணெய் கப்பல்கள் மட்டும் கடந்து சென்றன.

இதுகுறித்து சர்வதேச பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் கூறியதாவது: ஈரான் மீது அமெரிக்க ராணுவம் தாக்குதலை தொடங்கிய உடன், ஈரான் ராணுவத் தரப்பில் ஹார்முஸ் ஜலசந்தி முழுவதும் சிறிய ரக படகுகள் மூலம் கடல் கண்ணிவெடிகள் வீசப்பட்டன. அவற்றை முறையாக அகற்றும் தொழில்நுட்பம் ஈரானிடம் இல்லை.

அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளிடம் மட்டுமே கடல் கண்ணிவெடிகளை அகற்றும் சிறப்பு கப்பல்கள் உள்ளன. ஆனால், அந்த கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியில் நுழைய ஈரான் ராணுவம் தடை விதித்துள்ளது. இதன் காரணமாக இந்த ஜலசந்தியின் மிக குறுகிய பாதை வழியாகவே கப்பல் போக்குவரத்து நடைபெறுகிறது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

# செயின்ட் மைக்கேல் கல்லூரி 28வது ஆண்டுவிழா – ”Michael Utsav’26”

சிவகங்கை, ஏப்.13-

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலில் அமைந்துள்ள செயின்ட் மைக்கேல் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், 11.04.2026 அன்று 28வது ஆண்டு விழாவும் “MICHAEL UTSAV ’26” எனும் கலைவிழாவும் கல்லூரி வளாகத்தில் உள்ள Rev. Fr. சலேத் அடிகளார் கலையரங்கத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.





இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக நடிகரும் நகைச்சுவை கலைஞருமான KPY Bala அவர்கள் கலந்து கொண்டு, தனது சிறப்புரையின் மூலம் மாணவர்களை உற்சாகப்படுத்தினார்.

இவ்விழாவிற்கு கல்விக் குழும தலைவர் PMJF Ln. Dr. M. ஸ்டாலின் ஆரோக்கிய ராஜ் அவர்கள் தலைமை தாங்கி, மாணவர்களின் திறமைகளை பாராட்டி, மேலும் வளர்ச்சி அடைய வேண்டும் என ஊக்கமளித்தார். செயலாளர் திருமதி பாத்திமா மேரி அவர்களும், முதன்மை செயல் அதிகாரி Ln. Dr. யி. பிரிட்ஜெட் நிர்மலா அவர்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

கல்லூரி முதல்வர் Dr. S. கற்பகம் அவர்கள் நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

இந்த விழாவில் கல்வி, விளையாட்டு மற்றும் பண்பாட்டு துறைகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், மாணவர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் விழாவிற்கு சிறப்பு சேர்த்தன.

மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் சிறந்த மேடையாக இந்நிகழ்ச்சி அமைந்ததுடன், அனைவராலும் பாராட்டப்பட்ட நிகழ்வாகவும் அமைந்தது.









# பல்லாவரம்: பம்பரமாய் சுழன்று வேட்பாளர்கள் வாக்கு சேகரிப்பு

பல்லாவரம், ஏப்.13-

பல்லாவரம் தொகுதியில் திமுக கூட்டணியில் தேமுதிக சார்பில் அனகை டிமுருகேசன், அதிமுக கூட்டணியில் ஐஜேகே சார்பில் வழக்கறிஞர் வி.வெங்கடேசன், நாம் தமிழர் கட்சி சார்பில் மருத்துவர் ஆர்.கார்த்திகேயன், தவெக சார்பில் ஜே.காமாட்சி, புதிய தமிழகம் கட்சி சார்பில் அதங்கராஜ், தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் எஸ்.ரஹமத்துல்லா உள்ளிட்ட கட்சிகள் மற்றும் 14 சுயேச்சைகள் என 23 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

தேமுதிக பெண்களுக்கான திட்டங்களுக்கு முன்னுரிமை: திமுக கூட்டணியில் தேமுதிக சார்பில் போட்டியிடும் அனகை டி.முருகேசன். திமுக ஆட்சியில் மகளிர் விடியல் பயணம், மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட திட்டங்கள் குறித்து விளக்கி வாக்கு சேகரித்து வருகிறார். மேலும், போக்சோ சட்டம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதால் பாலியல் குற்றங்கள் வெளிச்சத்துக்கு வந்து அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுகிறது. பெண்களுக்கான திட்டங்கள் தொடர தனக்கு வாக்களிக்கும்படி பிரச்சாரம் செய்து வருகிறார்.

ஐஜேகே அதிமுக அரசின் சாதனைகளை முன்னிறுத்தல்: அதிமுக கூட்டணியில் போட்டியிடும் ஐஜேகே வேட் பாளர் வழக்கறிஞர் வி.வெங்கடேசன், தனது பிரச்சாரத் தில், கடந்த அதிமுக ஆட்சிக் காலத்தில் 100 யூனிட் இலவச மின்சாரம், தாலிக்குத் தங்கம், மானிய விலையில் ஸ்கூட்டர் உள்ளிட்ட திட்டங்களைக் கூறி வாக்கு சேகரித்து வருகிறார். மேலும் அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களை கட்டுப்படுத்த தமிழக அரசால் இயலவில்லை என குற்றம்சாட்டி பிரச்சாரம் செய்து வருகிறார்.

நாதக பெண்களுக்கு முக்கியத்துவம்: நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் மருத்துவர் ஆர்.கார்த்திகேயன். "நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர்கள் மட்டும் சரிபாதி பெண்கள் அல்ல, கட்சி கட்டமைப்பிலும் சமமான வாய்ப்பை வழங்குகின்றது. பெண்களுக்கென தனி சட்டப்பேரவை. பாராளுமன்றத் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும். அந்த வகையில் பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கிறோம்" என பிரச்சாரம் செய்து வருகிறார்.

தவெக பெண்கள் பாதுகாப்பு, இளைஞர் வேலை வாய்ப்பு: தமிழக வெற்றிக் கழகம் வேட்பாளர் ஜே.காமாட்சி. 'பெண்களின் பாதுகாப்பு, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு. அடிப்படை பிரச்சினைகளுக்கு தவெக முக்கியத்துவம் அளிக்கும். குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.2,500 , திருமணத்துக்கு பட்டுப் புடவையுடன். ஒரு பவுன் தங்கம் உள்ளிட்ட தேர்தல் வாக்குறுதிகளைக் கூறி வாக்கு சேகரித்து வருகிறார். தேர்தல் நெருங்க நெருங்க பல்லாவரம் தொகுதியில் வேட்பாளர்கள் பம்பரமாய் சுற்றிச் சுழன்று வாக்கு சேகரித்து வருகின்றனர்.

# ‘ஜனநாயகன்’ லீக் குறித்து ஆதாரமற்ற குற்றச்சாட்டு: தணிக்கை வாரியம் மறுப்பு

மும்பை, ஏப்.13-

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் மும்பை மண்டல அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ‘ஜனநாயகன்’ திரைப்படத்தை சினிமா தணிக்கை வாரியம் கசியவிட்டதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை. இது தவறாக வழிநடத்தும் குற்றச்சாட்டு. தணிக்கை வாரியம் கேடிஎம் ((Key Delivery Message) என்ற பாதுகாப்பு முறையை பின்பற்றுகிறது.



இந்த கேடிஎம் கடவுச் சொல் சினிமா தயாரிப்பாளரிடம் மட்டுமே இருக்கும். இந்த கடவுச் சொல் இல்லாமல் யாரும் படத்தை பார்க்க முடியாது. ஜனநாயகன் படத்தின் டிசிபி (டிஜிட்டல் சினிமா தொகுப்பு) விண்ணப்பதாரரிடம் உரிய ஒப்புதலுடன் கடந்த 17ம் தேதி மும்பையில் ஒப்படைக்கப்பட்டது. அப்போது முதல் அந்த நகல் அவர்களிடம்தான் உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# “ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களை பல மாநில முதல்வர்களும் பின்பற்றுகின்றனர்” வைகோ

திருவாரூர், ஏப்.13-

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களை பல மாநில முதல்வர்களும் பின்பற்றுவதாக வைகோ புகழாரம் சூட்டிப் பேசினார்.



திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு, நன்னிலம் தொகுதி திமுக வேட்பாளர் முகமது முபாரக்கை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அப்போது திருவாரூர் திமுக வேட்பாளர் பூண்டி கலைவாணனும் பங்கேற்று வாக்கு சேகரித்தார்.

அப்போது வைகோ பேசியதாவது: தஞ்சை சோழ மண்டலத்தை காப்பதற்காக, தமிழ்நாட்டின் வளங்களைப் பாதுகாப்பதற்காக நான் திமுகவை ஆதரித்து வாக்கு சேகரிக்க வந்திருக்கின்றேன். சமத்துவ, சகோதரத்துவ நாடாக தமிழகத்தை ஆண்ட ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும்.

பல மாநில முதல்வர்கள் கலந்துகொண்ட இந்தியா கூட்டணி கூட்டத்தில், தமிழக முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றிய திட்டங்களை பின்பற்ற விரும்புவதாக தெரிவித்ததாக அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டனர். அந்த அளவுக்கு திறமையான ஆட்சியை நடத்தி வருகின்றார். திராவிட இயக்கத்துக்கு எந்தக் கேடும் நேராமல் பார்த்துக் கொள்வது என் கடமை என்றார்

# “பாஜக ‘புல்டோசரை’ தமிழக எல்லையிலேயே தடுத்து நிறுத்துவோம்” பிருந்தா காரத்

திருவாரூர், ஏப்.13-

அதிமுகவின் பின்னாள் ஒளிந்துகொண்டு பாஜக புல்டோசர் வருவதை தமிழகத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்துவோம் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிருந்தா காரத் தெரிவித்துள்ளார்.




திருத்துறைப்பூண்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் க.மாரிமுத்துவுக்கு ஆதரவாக நேற்று இரவு நடைபெற்ற பொதுகூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பிருந்தா காரத், “இடதுசாரிக் கட்சிகள் போட்டியிடும் 10 தொகுதிகள் எங்களிடம் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக அரசு ஆற்றியுள்ள பணிகளின் அடிப்படையில், நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

எங்கள் கூட்டணி மிகவும் வலிமையானது. சந்தேகத்துக்கிடமின்றி இக்கூட்டணி மாபெரும் வெற்றி பெறும். அதிமுக பாஜக கூட்டணி முற்றிலும் சந்தர்ப்பவாதக் கூட்டணி. எவ்விதக் கொள்கை அடிப்படையும் இன்றி அமைந்துள்ளது. அதிகார வேட்கையைத் தவிர, இவ்விரு கட்சிகளுக்கும் இடையே பொதுவான அம்சம் வேறு என்ன இருக்க முடியும்? பாஜகவின் அடிப்படைச் சித்தாந்தங்களுக்கு முற்றிலும் முரணான கருத்துக்களைக் கூட, அதிமுகவினர் அதிகாரத்துக்காக பேசி வருகின்றனர்.

நாடு முழுவதும் இந்திய அரசியலமைப்பைத் தனது 'புல்டோசணீர்' கொண்டு நசுக்கி வருகிறது பாஜக. துரதிருஷ்டவசமாகவும், வன்மையாகக் கண்டிக்கத்தக்க வகையிலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த அதிமுக கட்சியானது இந்தியாவின் பன்முகத்தன்மைக்கும், குறிப்பாகத் தமிழ்நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியத்துக்கும் எதிராகச் செயல்பட்டுக்கொண்டு பாஜக இங்கு காலூன்றுவதற்கு வழிவகை செய்து வருகிறது.

இந்த 'புல்டோசர்' அணுகுமுறை இந்தியாவையே சீரழித்து வருகிறது. எனவே, இடதுசாரிக் கட்சிகளாகிய நாங்கள் திமுகவுடன் இணைந்து செயல்பட்டு, இந்த அதிமுகவின் பின்னாள் ஒளிந்துகொண்டுள்ள பாஜக 'புல்டோசர்' தமிழ்நாட்டுக்குள் வருவதை மாநிலத்தின் எல்லையிலேயே தடுத்து நிறுத்தப்படுவதை உறுதி செய்வோம். மேலும், திமுக தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் சிறப்பான வளர்ச்சியை முன்னெடுப்பதை உறுதி செய்வோம்” என தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161